PALACE LIBRARY
ZAMIN SINGAMPATTI

உ

நூற்றுங்கால் அய்யனார் துணை

# சங்கிலிப்பூதத்தார் கதை

# வில்பாட்டு

திருநெல்வேலி குசவன்தட்டுத்தெரு

**உ. கிருஷ்ணபிள்ளையவர்கள்**

எட்டுப்பிரதிக்கிணங்க

தென்காசி

**கா. நா. சுப்பிரமணியபிள்ளை**

அவர்களால் வெளியிடப்பட்டது

கிடைக்குமிடம் :—

கலைமகள் கம்பெனி

புத்தகவியாபாரம் திருநெல்வேலி ஜங்ஷன்

காபிரைட்] 1955 [விலை அணா 4

# ரிஜிஸ்டர் அறிவிப்பு

இதனுல் சகலருக்குந் தெரிவிப்பது யாதெனில் — 1867-வது வருஷத்திய 25-வது ஆக்ட் 20-வது பிரிவின் 6-வது விதியின் பிரகாரம் சங்கிலிப்பூதத்தார் கதை வில்பாட்டு என்னும் இந்நூலை காப்பி ரைட் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கின்றது. ஆகையால் இந்நூலுக்கு உடையவரான K. N. S. நடராஜபிள்ளை அவர்கள் உத்தரவின்றி பிறர் இதை பதிப்பித்தாலும், இதை வேறு பாஷையில் மொழிபெயர்த்தலும் கூடாது. இதில் கண்டிருக்கிற விஷயங்களை அச்சிடுதலும் கூடாது. அப்படி மீறி அச்சிட்டால் அதனுல் உண்டாகும் நஷ்டத்தை வசூல் செய்யப்படும்.

இப்படிக்கு
K. N. S. நடராஜபிள்ளை
தென்காசி

193271

நாற்றுங்கால் ஐயனுர் துணை

# சங்கிலிபூதத்தார் வில்லுப்பாட்டு

## விநாயகர் காப்பு

முந்திமுந்தி விநாயகரே முக்கண்ணுர் தன்மகனே
சந்தி விநாயகனே சையநல்லாள் புத்திரனே
வித்தைக்குவந்தோனே இக்கதைக்கு விக்கினங்கள் வாராமல்
கந்தனுக்கு முன்பிறந்த கணபதியே காப்புத்தானே

## சுப்பிரமணியர் துதி

ஏறிமயிலேறிவிளையாடு முகமொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுகமொன்றே
கூறுமடியார்கள்வினை தீர்க்குமுகமொன்றே
குன்றுருக வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாருபடு சூரரை வதைத்த முகமொன்றே
வள்ளியை மணம் புணர வந்தமுகமொன்றே
ஆறுமுகமானபொருள் நீ யருளவேண்டும்
ஆதி யருணுசலம் அமர்ந்தபெருமாளே

## கதை வரலாறு

நாடுநல்லோ நல்லநாடு நாவலர்கள் புகழும் நாடு
கோடைநல்லோ மழை பொழியும் குளிர்ந்த தென்றல் வீசும் நாடு
இஞ்சிபிச்சி பூக்கும்நாடு இருவாக்ஷி பூக்கும் நாடு
தேனிருந்து தேன்பொழியும் தென்கைலாசம் நந்நாடு
தாயே சரஸ்வதியே தற்காக்கவேணும் தாயே
நாவுநல்லோ தடுமாராமல் நற்குரலோமங்காமலே
வாக்குநல்லோ தடுமாராமல் வந்து தவவேணும் தாயே
யெனக்குச்சத்துருவானபேரை ஈரலெடுத்து மாலைபோட்டு
குத்திரெத்தம் குடித்திடுவாய் குமரிநல்லோ பகவதியே
உயிர்தன்னைக்கொன்றிடுவாய் குமறிநல்லோபகவதியே
சபைகெட்டியம்மா குடியிருந்து தர்க்காக்கவேணும் தாயே
யென்குருவே சற்குருவே யெனக்குபதேசித்த நற்குருவே
நானொருநாள் மறந்தாலும் நாவொருநாள் மறப்பதில்லை
குருவிருந்த விடந்தனியே கூட்டிசால்நீட்டறியேன்
அருகிருந்து சாரஞ்செய்தேன் அடியேன்பணிந்து தெண்டனிட்டேன்
பள்ளிப்பகையும் பகைவாடாவிளக்கும் குருதொட்ட செருப்பும்
[அடியேன் சிரசில்கொண்டேன்

## கயிலைச் சிறப்பு

கைலைமலை சிறப்புப்பாட கடவுளே துணையுண்டு
அப்பெரிய மலையினுட அதிசயத்தைச்சொல்லுகிறேன்
புலியுநல்லோ புல்வாயும் புணலருந்திவிளையாடுமலை
வேங்கைகிளி நாங்கினங்கள் வீரியங்கே குலாவுமலை

வாய்வுவந்துபெருக்க வருணன் வந்து மழை பொழியுமலே
தப்பட்டை தவுல் முரசு தவண்டைமல்லரி முளங்குமலே
வீரசின்னம் யெக்காளம் வெற்றிசங்கு முளங்குமலே
டம்மாணம் நாகசுரம் சங்கீதவாத்திய முளங்குமலே
செகண்டி பம்பையோடு ஜெயபேரிகைமுளங்குமலே
கனிவகைகள் பழுத்துதிர்ந்து காக்கைபக்ஷிதின்றுலாவுமலே
அரகராவென்ற சப்தம் அரனுர்க்குகந்தமலே
தபோதனர்கள் ரிஷி ஈஸ்பார்கள் தவம் செய்து முத்தியடையுமலே
அப்பெரிய மலேதனிலே அங்கேயாரெல்லாங்கூட்டமுண்டு
முப்பத்தி முக்கோடி தேவர்களும் நாற்பத்தி நாக்கோடி தேவர்களும்
கின்னரர்கள் கிம்புருடர்கள் கின்னரிநாரதர்களுடன்
வாணும் பிரமாவும் இந்திரனும் வரிசைப்புலத்தியர் அகத்தியரும்
அட்டதிக்கு பாலர்களும் அதைச்சேர்ந்த தேவர்களும்
வைகுண்ட வாசகரும் வந்திருக்கும் சமையத்திலே
நடனமிடும் பெண்களுடன் நாட்டியகீதம் பாடிநிற்க
கவிவாணர் கவிபாட கட்டியங்கள் கட்டியங்கள் நிற்க
யெச்சரிக்கை காரர் நின்று யெச்சரிக்கை கூவிநிற்க
சந்தடிக்காரர் நின்று சந்தடி விலகி நிற்க
மாணிக்கக்கைலேயிலே மரகதச்சிம்மாதனமதிலே
ஆணிப்பொன்மணி தலுங்க அரனுர் கொலுவிருந்தார்
பக்கத்தில் தேவிபார்வதியும் பதிவுதோழியேழுபேரும்
காளிகூளி ஏவல்செய்ய கவிந்தக்காரர் காத்திருக்க
மூத்தபிள்ளை முன்பிருக்க முருகன்பக்கம் அறுகிருக்க
நாரதம்மா முனிவர் நின்று நாட்டுவிசேஷம் சொல்லிநிற்க
யெகாந்தசமேதராக ஈஸ்வரர் இருந்தாரே கொலுவதனில்
பல்லாயிரங்கோடி அண்டத்திற்கும் பதிவுகணக்கு சித்திரபுத்திரர்
பிரம்மா இந்திரர் பக்கம் நிற்க பிரித்தெடுத்து அரிக்கைசெய்தார்
செனன மரணகணக்குகளே தெரிவிக்கும் வேளையிலே
தேவரெல்லாம் ஒன்றுசேர்ந்து தெரிவித்தார்யீஸ்பரர்க்கு
பிறப்பிறப்புநீக்கிவைத்து பெருமானே காக்கவேணும்
காக்கவேணும் கர்த்தாவே கைலேயங்கிரி வாசகனே
வைகுண்ட வாசகரே மனதுவைத்துக்காக்கவேணும்
தேவரெல்லாம் மரியாதை செய்து வைக்கவேணுமய்யா
ருச்சதர்கள் பிறந்திறந்து நாங்களும் பிறந்திருந்தால்
மும்மூர்த்திகளேக்கண்ணுல்கண்டும் மூடச்செனமம்போலே
மாண்டிறந்து பின்பிறந்தால் யெங்களுக்குமரியாதைக்குறைவைய்யா
செத்திறந்து பின் பிறந்தால் தேவர்கள் என்றும்மதியார்கள்
அரனும் பெருமாளும் அமத்தியே தேவர்களே
ரகசியமாயிருபேரும் நயஞ்செய்ய வேணுமென்றுர்
ஆலோசனை செய்து அப்போ அமிர்தங்கடையநாள்பார்த்தார்
திருவாடு சோதியிலே திருப்பாக்கடல்தனிலே
அருணகிரி மையேந்திரகிரி யெமயகிரி உதயகிரி
சதுரகிரி கைலாசகிரி மகாமேருகிரி நீலகிரி

யெட்டுக்கிரி பருவதத்தில் ஈசனிருப்பிடம் கைலையங்கிரி
கைலையங்கிரிக்கடுத்த மகாமேருகிரி பருவதமாம்
மகாமேருகிரி பருவதத்தை மத்தாகத்தானே தானட்டி
வாசுகி ஆதிசேடனை வடக்கயராய்த்தான்பூட்டி
வானோர்கள் ஒருபக்கமும் வாலியொருபக்கமும்
ஈசன் பெருமான் தேவரோடு ரிஷி தபோதனரெல்லோரும்
பக்கத்தில் பார்பதி தாயும் பதிவுதோளி பெண்களுடன்
செய்யும் சடங்குகளைச்செய்து வைத்து சிவனார் எம்பெருமானார்
[உரைத்திடவே
அரனாருரைத்திடவே பால்கடலில் அமிர்தங்கடையிரவேளையிலே
முகஞ்சலித்து வெதசடவாய் மூதேவியம்மை முன்பிறந்தாள்
சிதேவியம்மைபின்பிறந்தாள் திரும்ப அகலிகையும்தான் பிறந்தாள்
சட்டநாதன் கேத்திரபாலன் தடியுடன் பூதம்பிறந்தவுடன்
அரனாருட கிருபையாலே அமிர்தமெல்லாமொன்றுசேர்ந்து
வாரியெடுத்தடைத்தார் வைகுந்தவாசர் மனது சந்தோஷமானார்
[கைலையங்கிரி வாசர்
அதிகமாயிழுத்ததாலே ஆதிசேஷன் விஷத்தைக்கக்க
அந்தநல்லோ விஷந்தானும் அண்டமொகடுவரை தான்படர்ந்து
ஆலகாலவிஷம்போலே சீறி அடர்ந்துவருவதை வானோர்கண்டு
செத்திரந்து போவோமென்று தேவர்கள்முதல்யாபேர்களும்
யீசனுட பின்பக்கத்தில் யாபேர்களும் கூச்சலிட்டார்
அபயஸத்தந்தான்கொடுத்து அடர்ந்துவருகிற விஷமதனை
யீஸ்வரனார் வாய்திறக்க உள்ளடங்க மகாதேவிபார்வதியும்
ஈசனுட திருக்கண்டத்தை இருகப்பிடித்திடவே
கண்டத்தில் கிழ்போகாமல் கரமத்தில் அமைந்திடவே
ஆல்முண்டகண்டனென்றும் அரனார்நஞ்சு உண்டாரென்றும்
நஞ்சுண்ட யீசனென்றும் நமஸ்கரித்தார் தேவரெல்லாம்
திருக்கூட்டந்தன்னையமர்த்தி திருமாலும அமுர்தத்தை
அகப்பைகொண்டுவிளம்பிவர ஆதித்தன் சந்திரன் மத்தியிலே
ராச்சதனொருவன் மறைந்திருந்து அமிர்தமதையருந்திடவே
பக்கமுள்ள சந்திர சூரியர் பார்த்திருந்தார் பெருமாளிடம்
கண்சைகை காட்டிடவும் கையிலே யிருந்த அகப்பையாலே
துண்டுதுண்டாய் வெட்டிடவே துடித்தங்கேவுயிர்போகாமல்
நவக்கிரகத்துடன்சேர்த்து ராகுகேதாகச்செய்துவைத்தார்
அகலிகப்பெண்தனக்காக ஆசைப்பட்டார் சகலரும்
உனக்கெனக்கென்று சொல்லி ஒன்றுக்கொன்று சண்டைபோட்டார்
சண்டைசெய்யவேண்டாமென்று சகலபேரையும்தானமர்த்தி
அலைகடலில் ஐயாயிர வருஷம் மூழ்கித்தவமிருந்தால்
இப்பெண் கிடைக்குமென்று யீஸ்பரனாருரைத்திடவே
ராட்சதர்கள்தேவரிஷி நடுக்கடலில் தாழ்ந்தார்கள்
கேத்திரபாலன் சட்டநாதர் கிருஷ்ணமூர்த்தி வேணுமென்றார்
வைகுண்ட காவலுக்கு வழியனுப்பி வைத்தார்கள்
கைலாசங்காவலுக்கு கணநாதர் பூதமதை

ஈசானிய மூலையிலே இருத்திவைத்தார் யீஸ்வரரும்
வைகுண்ட வாசரிடம் வரும்தேவ ரிஷிகளையும்
சட்டநாதர்கேத்திரபாலர் சங்கடங்கள் செய்துவைத்தார்
கைலாசங்காத்திருக்கும் கணநாதர் பூத்தாரும்
அட்டாதுட்டி அக்கிரமங்கள் அதிகமாகசெய்துவந்தார்
யென்பெருமாள் யீஸ்வரரும் இருந்துமே ஆலோசித்து
அரிகர புத்திரருடன் அனுப்பிவைக்கவேணுமென்று
சட்டநாதர்கேத்திறபாலர் பூதத்தையும்வரவழைத்து
கொல்லுவரம் வெல்லுவரம் கொடுக்கும்வரம் அழிக்கும்வரம்
அள்ளியிடும் விபூதியால் அக்கினியாய் வளறும்வரம்
சங்கு வைத்துப்பூரித்தால் தணல் பத்தி எரியும்வரம்
யெம்பெருமாள்ஈஸ்வரரும் இவ்வரங்கள் தான்கொடுத்து
அட்டாதுட்டியக்கிரமங்கள் யதிகமாகச்செய்யாமல்
பூலோகந்தன்னிலே புகழ்பெரிய அய்யனரிடம்
போய்வாழ்ந்திருங்களென்று புத்திசொல்லியனுப்பிவைத்தார்
கீழ்விளுந்து நமஸ்கரித்தார் கேத்திரபாலர் சட்டநாதர்
பூத்தாரும் கீழ்விழுந்து போத்தி விடைதான்வாங்கி
கைலாசந்தன்னைவிட்டு கடல்கிழக்கரையோரமாய்
வருகிறவழிப்பாதை மலையொன்றைக் கண்டார்கள்
அட்டகிரி எட்டதிலும் அதற்குவமையானமலை
மலையை நாடி மூவர்களும் வந்து அங்கே பார்க்கையிலே
ஓங்கிநல்லோவளர்ந்தமரம் ஒருகணுவில்லாதமரம்
சந்தணத்தேக்குமரம் தலையைச்சாய்ந்துபார்த்தாலும்
உச்சந்தெரியாதமரம் உருண்டமலைபோலுள்ளமரம்
அப்பெரியமரமதிலே அமர்ந்திருந்தார் மூபேரும்
வெகுகாலம் வெகு வருஷம் வீற்றிருக்கும் நாளையிலே
சித்திரக்கூடமுள்ள செட்டியார் ஏழுபேர்கள்
ராமன்செட்டி சுப்பன்செட்டி நடராஜ சோமதத்தஞ்செட்டி
கருப்பஞ்செட்டி முத்தஞ்செட்டி கைலாசஞ்செட்டியுமாய்
கப்பல்செய்யவேணுமென்று நினைத்து கடலுக்கப்பாலே தான் போய்
மரம்வெட்டிக்கப்பல்செய்து வருவோமென்று ஒன்றுசேர்ந்து
செல்லுமான திரவியங்கள் சேகரித்து ஒன்றுசேர்த்து
தச்சர் கொல்லர் கோடாலிக்காரர் மட்டாள்க்கள்கொத்தமார்கள்
இரும்புஆணி செம்புஆணி வெள்ளியியம் காரியியம்
செப்புத்தகடு திருத்தகடு பித்தளைத்தகடு ஊசிக்காந்தம்
அனுப்பும்படி ஒப்பந்தம் அவரவர்க்குச்செய்துவைத்து
ஒப்பந்தம் முச்சரிக்கை உடன்படிக்கைவாங்கிக்கொண்டு
வழிக்கரிசி கட்டமுது வகைவகையாய் பண்டங்களும்
தாகசாந்திப்பண்டங்களும் தகையாறுமார்க்கமுடன
ஏழுசெட்டிப்பிள்ளைமாரும் ஏத்தியே கப்பல்தன்னில்
தச்சர்கொல்லர் கோடாலிக்காரர் மற்றுமுள்ள ஆள்க்களுடன்
திரவியமும் கையுடனே செட்டியார்களேழுபேரும்
கப்பலேறி ஏழுபேரும் கடல்தாண்டிக் கீழக்கரை யோரந் தானடுத்தார்

கப்பல்விட்டுக்கிளிரங்கிக் கண்டார்கள் யுயர்ந்தமரம்
அந்தமலை தனைநாடி அனைவோரும் போய்சேர்ந்து
வனமதிலே மரம்பார்த்து வருகிறவேளையிலே
சந்தனதேக்குமரம் மூவர்சங்கிலிபோட்டாடும்மரம்
ஓங்கிவளர்ந்தமரம் ஒருகணுவுவில்லாதமரம்
உச்சந்தெரியாதமரம் உருண்டமலைபோலுள்ளமரம்
அந்தநல்லோமரத்தைக்கண்டு அனைவோர்களும் சந்தோஷித்து
ஏழுகப்பல்போக இன்னுங்கப்பல் செய்யலாம்
இருங்களென்றுசெட்டியார்கள் இருந்தனரவ்விடத்தில்
இடம்பார்த்து சாய்கைபோட்டு இருந்தமுதுகொண்டார்கள்
சூரியனும் அஸ்தமாய் வருணனுதையத்திலே
தச்சர்கொல்லர் கோடாலிக்காரர் தங்கள் குலதேவதைக்கும்
மலையிலுள்ள தேவதைக்கும் மண்தோண்டியடுப்புபோட்டு
மூத்தபிள்ளைவிநாயகரை முன்பாகத்தானிருத்தி
பொங்கப்பானை யேரவைத்து பொறிகடலைமுன்புவைத்து
தேங்காயுடைக்கையிலே சிதருதய்யாதுண்டு துண்டாய்
பொங்கப்பானை கொதித்ததுவும் பொறிப்பொறியாய்ப் பத்தியது
கேடுவரும்பின்னேயென்பார் மதிகெட்டுவரும் முன்னேயென்பார்
இக்குறிப்பையறியாமல் யேழுசெட்டிபிள்ளைமாரும்
பெலிகொடுத்துக்கோடாலியைப் போடச்சொன்னார்மரமதிலே
ஆந்தையங்கே யதறிடுமாம் அழுகணித்தேவாங்கு கரைந்திடுமாம்
கோட்டான்வலியன்குளறிடவும் கொக்குப்பறவைக்கூச்சலிட
நரிஊரியூளையிட நல்லபாம்பு இரைச்சலிட
முதல்வெட்டுப்போடையிலே மொழிச்சென்றுதும்மலாச்சு
இரண்டாவெட்டுப்போடயிலே ரெத்தமாகவடியக்கண்டார்
மூன்றும்வெட்டுப்போடயிலே முளங்காலில் வெட்டுப்பட்டுதையா
குதிரைமுகத்தோடே வெட்டியதை குறிப்பறிந்துநிருத்தாமல்
தடபுடலாய்வெட்டச்சொல்லி சாய்த்தார் மரந்தன்னை
அலறியங்கேவீறிட்டு அம்மரஞ்சாய்ந்த ஓசையினால்
மலையிலுள்ள மிருகங்கள் மனங்கலங்கி ஓடியதாம்
பக்ஷிபறவையெல்லாம் பயந்தங்கே ஓடியதாம்
அப்பெறியமரமதனை அளந்தங்கேகண்டித்து
கண்டித்துத்துண்டித்து கரைக்குமெள்ளக்கொண்டுவந்து
ஆசாரிமார்களாலே அத்தனையும்டணிப்படுத்தி
யேழுகப்பல்தான்முடித்து இருக்கும்மிச்சமரந்தன்னை
கப்பல்களில்தானேத்தி காணுததுக்கு வெட்டியேத்தி
பொங்கலிட்டுப்பொலிகொடுத்து போத்திவணங்கி நமஸ்கரித்து
பாய்விரித்துக் கப்பல்மேற்கு பறந்தோடிவருகையிலே
மேலக்கரைத்தேடிக்கப்பல் விரைவாயோடிவருகையிலே
ஓலப்பூக்கடல்தேடி ஓடிவரும்கப்பல்தன்னை
சட்டநாதர் கேத்திரபாலர் சங்குபூதத்தாருமே
கப்பல்வர நடுகடலில் கண்டார்கள் மூபேரும்
கொல்லர்தச்சர் கோடிக்காரர் காமட்டாள்க்கள் செட்டியார்கள்

கப்பல்லோட்டும் வேலைக்காரர்களை கவுத்தான் முதலச்சகலரையும்
யேளுகப்பல் தன்னோடே யிருத்தினர்கள் நடுக்கடல் தனிலே
கப்பல்கவிந்தவுடன் கப்பலுள்ள பேர்களெல்லாம்
செத்தார்கள மடிந்தார்கள சிவலோகம் சேர்ந்தார்கள்
வங்குலையாய் மாண்டிறந்தார் மகாதேவர் பூதத்தாலே
துஷ்டதெய்வபூதத்தாலே துயரடைந்தே மாண்டார்கள்
சட்டனுதர் கேத்திரபாலர் சங்குபூதத்தாருமே
கப்பல்தன்னை கவிழ்த்துவிட்டு கறைமேற்கு பார்க்கும்போது
கோபுறமும் கொடிமரமும் கோவென்ற யிறைச்சலுடன்
டம்மானம் பேரிகையும் டவண்டை மல்லறி வீருணக்
யெக்காளம் நாகசுரம் இருண்டபம்மை மத்தாளம்
சேகண்டிகைத்தாளம் திருச்சங்குத்தவிலோசை
தவளச்சங்கு ஓசைகளும் தான்கேட்டார் மூபேரும்
ஓடிவரும்வேளையிலே யுகந்த சண்முக விலாசத்திலே
செந்திலாருமுகவர்க்கு தீவாறதனைச்சமையமாம்
யேளடுக்குத்திபத்தை யெடுத்துயர்த்தும் வேளையிலே
கண்டார்கள் கண்குழிந்தார்கள் கைகூப்பி தெண்டனிட்டார்கள்
கற்பூரதிபமதை கையொயர்த்தும் வேளையிலே
சாஷ்டாங்கமாகவே சரணம்புகுந்து தெண்டனிட்டார்
பார்த்துமே ஆறுமுகவேலவர்யிவர்களை பாதுகாக்க வேணுமென்று
யெங்கிருந்து யெங்குவந்தீர் இங்குவந்த காரியமேன்
ஒளியாமலுள்ளதெல்லாம் யுறைக்கவேணு மென்றுகேட்க
கைலாசம் வைகுண்டம் காத்திருந்தோம யீஸ்பரரே
தேவரிஷி மற்றுமுள்ளோர் தேவர்க்கோன் முதலாக
சங்கரன் தன்னிடத்தில் சடைந்து நின்று ஓலமிட்டார்
யென்னசொல்லி யோலமிட்டார் யெம்பெருமானிசனிடம்
அட்டாதுட்டியக்கிரமங்கள் அகிர்த்தியங்கள் செய்வதாக
வேளை தப்பிவேளையிலே வாரபேரை போரபேரை
தொந்தரவு செய்வதாக சொல்லிடவேயிசனிடம்
பூலோகம் நீங்கள்சென்று போய்ச்சுத்திப்பார்த்துக்கொண்டு
அரிகர புத்திரனர் அய்யரையுங்கண்டுகொண்டு
சிலகாலம்மங்கிருந்து திரும்பி வர விடைகொடுத்தார்
உத்திரவுப்படியாக நாங்கள் உடனுகை மூவருமே
கிளக்கறை பாதையாகக் கிலேசமாகவரும்போது
அட்டகிறிபருவதத்தில் அமைந்தகிரி யொன்றுகண்டு
வெகுகால வெகுவருஷம் விற்றிருக்கும் மந்நாளையிலே
சித்திரகூடமுள்ள செட்டியர்கள் யேளுபேர்கள்
மரம் வெட்டிக்கப்பல்செய்து வந்துமேயம்மலையில்
தங்கியிருந்தமரமதனை தடபுடலாய் தானும்வெட்டி
கப்பல்செய்து கடலில்விட்டார் கப்பலுடன் கூடவந்து
உட்கடலில் வாறபோது யுடைத்துமே கப்பல்தனை
இருந்தமன்னரத்தனையும் யேமனுக்கு ஒப்பிவித்து
மேலக்கரைதேடியங்கே விரைவாய்வரும் வேளையிலே

அரகராவென்றசப்தம் அங்கே அதிகமாக கேட்டுது
தம்பட்டம் தவில்முறசு டவண்டைமல்லறி வீருணம்
யெக்காளம் நாகசுறம் கைத்தாளமத்தாளம்
அதிர்வேட்டுமணியோசை யதிகமாகக்கேட்டபோது
ஓட்டமும்நடையுமாக ஆய்யா ஓடிவந்து பார்க்கும்போது
தீபாரதனைச்சமயம் தெரிஸனை கிடைத்ததய்யா
ஆதரித்துப்பாதுகாக்க அன்புவைக்கவேணும்சுவாமி
பசியமர்த்திசிலகாலம் பக்கமதில்யிருக்கையிலே
சட்டறுதன் கேத்திரபாலர் சங்குபூதத்தாறுமே
வாய்பொத்தி கைகெட்டி வணங்கிநின்றுயேது சொல்வார்
பொதிகைமலை சுற்றிப்பார்க்க போகவிடை தரவேணும்
தீர்த்தங்கள் திருநீறும் திருக்கையினால் தரவேணும்
வாங்கியேவிடைபெற்று வருகிறுர்கள் மூவறுமே
மேலக்கறைப்பாதையாக விரைவாய் வருகையிலே

கன்னியாகுமரியம்மையை கண்டவுடன் கைகுவித்து
பகவதியை தெரிஸித்து பசியமர்த்திருக் சமங்நாளையிலே
பொதிகைமலை தன்னதிக்கு போகவிடைபெற்றுக்கொண்டு
மயேந்திரகிரிபாதையாக வரும்போது திருக்கிறங்குடி
அழகியநம்பி குருங்குடி நம்பி அந்தநம்பிகோவிலிலே
உதையமாத்தாண்டம் காலசந்தி உச்சிக்காலம் கூடும்போது
மத்தாளம் மேளவாத்தியம் மடமடென்று சப்தமது
வெகுதுலைக்குக்கேட்டிடவே விறசாய்நடந்து மூவறுமே
திருக்கிறங்குடி நமபியுடத்திருக்கோவில் யுட்சேர்ந்து
கரங்கூப்பிக்கைகுவித்து கால்விழுந்து நமஸ்கரித்தார்
யெழுந்திருமல் கீழ்விழுந்து இருக்கிற வேளையிலே
அரிஅயனுந்தான்பார்த்து அவர்களையெழும்பசெய்து
பசியமர்த்தி மூவரையும் பார்த்துமே யேதுரைப்பார்
மலைநம்பிகோவிலுமே மற்றுமுள்ளமலைகளுடன்

குத்துப்பாறைக்காளிகாவல் கொடிதானகாவலுண்டு
அப்பெரிய காளிக்குள் அடக்கமாய்மூவருமே
முன்னேடுஞ்சேவுகருய் முதல்பிள்ளையாய் நீங்கள்நின்று
காத்துவறவேணுமென்று கட்டளையிட்டாரய்யனரும்
கரங்கூப்பிகைகுவித்து கட்டளைப்படி நடப்போமென்றூர்
பொக்கிஷங்கள் வுன்காவல் பூட்டுத்திரவுகோல்உன்காவல்
மலைங்காடு உன்காவல் யென்றுசொன்னர் அய்யனரும்
யீசானிய மூலையிலே சம்மதித்து இருந்தார்கள் மூவறுமே
அழகியநம்பிகோவிலிலே அர்ச்சகர்தொழுதநம்பி
தொழுதநம்பி பெண்சாதி ருக்குமணியாச்சியம்மாள்
மலடிருந்து மனமுருகி மைந்தனுக்குத்தவஞ்செய்து
நேருதகோவிலெல்லாம் நேற்சைசெய்து பூஜைசெய்து
கனிவிரதம் பவரணைகள் தப்பாமல் தானிருந்து
யெம்பெருமான் கிருபையாலும் ஈசனுடக்கிருபையாலும்
ஆண்குழந்தைபிறந்திடவே அதிக சந்தோஷமாகி

பதினாறும் நாளையிலே பந்துக்கள் தனையழைத்து
வேணமட்டும் சாதமிட்டு வெத்திலைபாக்கு தான்கொடுத்து
ஆர்பேரிடுவோமென்று ஆலோசித்தார் தொழுதநம்பி
தன்னுடைய தகப்பன்பேரு சாத்தினார்கள் பந்துக்கள்
குண்டலவாசகனென்று கூப்பிட்டார்தொழுதநம்பி
பந்துக்களனைவர்களும் பயணமிட்டே போய்விட்டார்
பொன்னொருதட்டாயும் பூவொருதட்டாயும்
தரையிலேவிட்டாக்கால் தண்டைக்கால் நோகுமென்று
பூமியிலே விட்டாக்கால் புழுதிமண்பிறமுமென்று
வட்டிலிலே சோறுபோட்டால் வளரநாள்ச்செல்லுமென்று
மடியிலேசோறுகட்டி வளர்த்துவந்தாள் ருக்மணியாச்சி
கோவிலம்மாள் புறமதிலே குடியிருந்துவரும் நாளிலே
ஒருவயது இரண்டுவயது மூணுவயது நாலுவயது
ஐந்துவயதுக்குண்டலவாசனுக்கு ஆனவுடன் தொழுதநம்பி
பள்ளிக்குத்தானிருத்திப் படித்துவந்தான் குண்டலவாசன்
படிப்படியாய் யேணிவைத்து படியேறினாப்போலே
முன்படித்தபிள்ளைகளுக்கு முதல்ப்படியாய்குண்டலவாசன்
தண்ணீர்வந்து பெருகினாப்போல் தடதடவென்று படித்துவந்தான்
அப்படியிருக்கிறவேளையிலே அறிவுள்ளகுண்டலவாசனுக்கு
திருக்கிரங்குடிகோவில்முறை திகைந்துநல்லதொழுதநம்பி
மறுபடியும் முறைவரவே மைந்தனுக்குத்தெரியாமல்
வழிகூடி நடந்திடவே மைந்தனுமே தாயினிடம்
அழுது புலம்பிக்கொண்டு குண்டலவாசன் அம்மாவென்று பின்
[தொடர

அழுதுகொண்டு பின்வந்த அருமையுள்ள மகனைக்கண்டு
அலறாதே கதறாதே அப்பா இப்போவந்திடுவார்
வாழைபழம்பலகாரம் மாங்கனியும் நான்தாரேன்
கொண்டுபோய் பிள்ளைகள்கூட விளையாடுவென்று சொன்னாள்
யென்னதான்சொன்னாலும் யேற்காமல்குண்டலவாசன்
தகப்பனிடம் விடவேசொன்னான் தாய்ருக்மணியாக்ஷியம்மாள்
பையனைக்கைப்பிடித்துப் பாதைகூடிவழிநடந்து
தொழுதநம்பிபோரவழி துடர்ந்துமேயங்குசென்று
பாலகனைப்பத்திரமாய் கூட்டி பார்த்துவாருமென்று
புருஷனிடம் ஒப்பிவித்து பிறப்பட்டுயூர்தனக்கு
வந்துமேருக்மணியாச்சி மனவருத்தமாயிருந்தாள்
பிள்ளைநல்லகவலையாய் பெருங்கவலையாயிருந்தாள்
தொழுதநம்பி பிள்ளையுடன் துயர்ந்து வழிநடந்து
திருக்கரன்குடி நம்பிகோவில் சென்றுமேபிள்ளைக்கு
தீன்பண்டம்வேண்டியது சவுகரித்துத்தான்கொடுத்து
தின்றுபசியாரும்பிள்ளாய் சீக்கிரமாய் நான்வாரேன்
நம்பிகோவில் பூஜைசெய்து நானிச்சணத்தில்வருகிறேன்
இவ்விடத்தை விட்டுநீயும் யேகாதே யென்மகனேயென்று
புத்திமதிகள்சொல்லி பிறப்பட்டார் ஸ்தானஞ்செய்ய

நேமநிஷ்டையனுஷ்டானம் நிறைவேற்றி முடிந்தபின்பு
அசையாமணியைத்தட்டி அன்பின்புக்குச்செடுத்து
துறவுகோலால்த்தான்திறந்து தூண்டாவிளக்கைச் சரிபார்த்தான்
அபிஷேகயலங்காரம் அக்கம்பக்கம் கோவில்முதல்
சாயலச்சை சோடசங்கள் சகலமும் முடிந்தவுடன்
அத்தசாமப்பணி விடைகள் அப்படியே தான்முடித்து
திருக்காப்புத்தானுமிட்டு திரும்பினன் தன்னூருக்கு
மைந்தன் கூடவந்ததுவும் மயங்கி நித்திரை செய்கிறதும்
பாலன்கூட வந்ததுவும் படுத்து நித்திரைபோனதுவும்
நினைவுசற்றுமில்லாமல் நெடுந்தூரம போய் விட்டார்
பாலன் தன்னை ஒப்பிவித்த பாதகத்திகிட்டவந்தவுடன்
பிள்ளைப்பிரதாபம் பெரியதாய் தானோடி
மைந்தன்பிரதாபமல்லோ மனச்சலிப்பாய் தானோடி
ஓட்டமும் நடையுமாக ஓடிச்சென்று திருக்கிரன்குடி
கோபுரவாசலுக்கு கூச்சலெடுத்து திறக்கையிலே
சங்குநல்லோ பூதத்தார் தானறிந்து அன்னேரம்
தாப்பாள் துரக்கவொட்டாமல் தடைப்படுத்திஏதுசொல்வார்
வாரும்பிள்ளாய் தொழுதநம்பி வார்த்தையொன்று சொல்லக்கேளும்
அர்த்தசாமங்கூடி அடைத்தகதவதன்னை
மைந்தனுடைய ஆசையினல் மகவாசைதன்னிலே
பிள்ளையுட ஆசையினல் பித்துப்பிடித்துப்போலே
யென்னுடைய காவலென்று யெண்ணமைல்புத்திகெட்டு
தாள்திறக்க யாரம்பித்தாய் சற்றும்பயமில்லாமல்
உன்னுடையபாலகனை யுயிர்ச்சேதமில்லாமல்
இரவுமட்டுங்காத்திருந்து நான்தாரேன்பாலகனை
மயங்காமல் தியங்காமல் கவலைவையாமல்
ஊர்போய் யுதையம்வந்தால் உன்பிள்ளையைதான் தாரேன்
அழகிய நம்பிகுருங்குடிநம்பி அவருணை தப்பாது
இல்லாதபோனுக்கால் யெமன்லோகஞ் சேர்த்துவைப்பேன்
இவ்வார்த்தைதனைக்கேட்டு யேகியேதொழுதநம்பி
குடியிருப்பைநாடியல்லோ கோவிலம்மாள் புரம்வந்தான்
தலைவாசல்கதவை யடைத்துத்தாள்ப்பாளிடக்கண்டு
ருக்மணியாகஷியைக்கூப்பிட்டே யோலமிட்டார்
சத்தமிடக்கேட்டவுடன் தன்மகன்வந்தானென்று
தன்மகன்வந்தானென்று சந்தோஷத்துடனே
சந்தோஷத்துடனேதான் தான்திறந்தாள் தாப்பாள்தனை
அப்பாமகனென்ருள் அய்யர்சொல்லத்துடங்கினறே
அமுதைக்கீழேயிறக்கிவைத்து அய்யர்தொழுதநம்பியுமே
சாயலச்சை அத்தசாமம் தானடக்கும்வேளையிலே
குண்டலவாசனுக்குக்கொடுமுரக்கம் வந்ததினல்
பக்கமுள்ளயரைதனிலே படுக்கவேவைத்திருந்தேன்
கோவிலுக்காலங்கூடியபின் கொப்பரைச்சாதமெடுத்தேன்
நியாபகத்தப்பாக நடையடைத்து வந்துவிட்டேன்

0-,84MKP2 N55

ஓட்டமும் நடையுமாக ஓடிவரும்வேளையிலே
மைந்தனுடையயாபகம் வந்ததினால் ஓடிப்போய்
கோபுறத்திட்டிவாசலுக்கு திறவுகோலெடுத்துத்திறக்கையிலே
தாள்திறக்கமாட்டாமல் தயங்கிநிற்கும்வேளையிலே
சங்குநல்லோபூதத்தாறும் தடைப்படுத்தியேதுசொல்வார்
பத்திரமாய்ப்பாலகனை பாதுகாத்துத்தருவேனென்றும்
காலங்கூடி முடிந்தவுடன் கதவுதிறக்கக்கூடாதென்றும்
அழகிநம்பி குருங்குடிநம்பி அவர்கள்மேலாணையிட்டு
மறுநாள்காலத்தே வரும்படிக்கும் குழந்தைகாத்து ஒப்பிப்பதாயும்
வழியனுப்பிப்போகச்சொல் வந்துவிட்டேன்யென்றானே
இப்போகுழந்தைத்தான் வேண்டுமானால்கொன்றுதரும் தப்பாது
அப்படியே யெந்தனிடம அறிக்கைசெய்ய ஓடிவந்தேன்
அய்யோசிவனேயென்று அலறிருக்மணியாகஷி
தலையிலடித்து முகத்திலடித்து தரையில் கிடந்துருண்டு
யென்னுடைய பாலகனை இச்சணத்தில் கொண்டுவருவிட்டால்
நாக்குநல்லோபிடுங்கிக்கொண்டு நான்சாவேன் இச்சணத்தில்
நஞ்சுதின்று கயறுபோட்டு நாண்டுகிட்டுச்செத்திடுவேன்
அலுங்காக்கஜமதிலே ஆளிறங்காப்பொய்கையிலே
கல்கெட்டிறங்கிடுவேன் கசத்திலுயிர் விட்டிடுவேன்
ஒருபழிக்கு இரண்டுபழி உம்மாலே வாங்கிக்கொள்ளும்
இல்லாதேபோனுக்கால் இச்சணத்திலப்பிள்ளையை
யென்னைக்கூட இட்டுப்போய் யென்னிடத்தில் ஒப்பிவையும்
வாரும் நடவுமென்று வழிநடந்தாரிருபேரும்
திருக்கிறன்குடிவந்து சேர்ந்துகோவில் முன்புவந்து
கோபுரத்திட்டிவாசலிலே திரவுகோலையெடுத்துத் திரக்கையிலே
கூவென்று கூச்சலிட்டார் கோபம்வந்து சங்குபூதம்
காலையிலே குண்டலவாசகனை காத்துத்தாரேனென்றுசொல்லி
ஆணையிட்டுத்தான்கொடுத்தேன் அதையும்நீநம்பாமலே
பெண்சாதிவார்த்தைகேட்டு புத்திகெட்டு வந்ததினால்
மகனிப்போவேணுமென்றால் வாங்கிக்கோ தொழுதநம்பி
திறவுகோல்தொண்டுமுன்பு துணியேந்திக்கொள்ளுமென்று
துண்டுதுண்டாய் பிச்செடுத்து திரவுகோல்தொண்டு வழியே போட்
[டதுவே

கண்டார்களிருபேரும் கைகொண்டுமுகமறைத்து
அலரியேகீழ்விழுந்து அய்யோசிவனேயென்றார்
அழகிநம்பிகுருஙகுடிநம்பி இந்தனியாயம்செய்தீர்களே
ஊளிபூளிதலமுறைக்கு உங்களைநம்பியிருந்ததற்கு
வன்குலையாய் மாளவைத்த இந்தவன்கொடுமை தீருதே
ஆறிடம்போய் முறையிடுவேன் அபையம் யபயமய்யா
சேலைபோட்டு நாவெழுத்து செத்திறந்தாள் ருக்மணியாகஷி
தொழுதநம்பிதானறிந்து தோகறைத்தாயெடுத்தடக்கி
யேழுநம்பியெம்பெருமானிவர்கள்காவல்சங்கு பூதங்களை
அட்டாதுட்டி செய்வதினால் அடக்கிவைக்கவேணுமென்று

மலையாளம்போய்வர மற்றுமொருயாள்ப்பிடித்து
யேழுநம்பிக்கோவில்பூசை யிடையூறுவருமல்
தொழுதநம்பிமாள்ப்பிடித்து தொண்டுசெய்யவைத்துவிட்டு
மலையாளம்போவோமென்று தொழுதநம்பி வழிநடக்கும்வேளையிலே
யெம்பெருமானே யேழுநம்பியிச்சேதி தானறிந்து
மலைநம்பி தான்போய் வழிமரிக்கத்தொழுதநம்பி
சாஷ்டாங்கமாய்த் தெண்டனிட்டு தன்னுடையசங்கடத்தை
மைந்தனுடன்மனவியுமாய் மாண்டிறந்துபோனதுவும்
பூதஞ்செய்த நிஷ்டூரத்தால் புறப்பட்டுவந்ததுவும்
தெரிவித்துமுகமரைந்து தீத்தருளவேணுமென்றார்
மலைநம்பி தானமத்தி மயங்காதேயென்றுசொல்லி
முன்னாள்யமைப்புப்படி முடிந்ததைநீவிசனியாமல்
இன்னாளில் மனவிமைந்தன் யிருவேநான் தப்பாது
சங்குநல்லோ பூதத்தாரைத் தான்போகசெய்துவைப்பேன்
மயங்காமல் தியங்காமல் மனச்சடவை நீக்கிவைத்து
தொழுதநம்பி அர்ச்சகரைத்துருசாகக்கூட்டிவந்து
கோவில்முறைப்பணிகள் கொண்டுமுடிக்கசெய்து
திருமங்கிலியம் முகூர்த்தம் வைத்துதொழுத நம்பித்திடசித்தமாயிருக்
[கிற நாளையிலே
சங்குநல்லோ பூதத்தாரைத்தானங்கேவரவழைத்து
சட்டநாதர் கேத்திரபாலர் தானிருவரிஙகிருப்பார்
மலைவளத்தைக்காத்திருந்து மகழ்ந்துநீயிருந்திடுவாய்
யேழுமலைவடக்கயருய் யெங்கும் நீ நிரைந்திருப்பாய்
அச்சங்கோ விலாறியங்காவுசொறி முத்தையர் கொளத்துப்புளி
திருவாலியய்யர் முதல்சேவித்து நீ யிருந்திடுவாய்
அட்டாதுட்டிகள்பண்ணாதே ஆக்கிரமங்கள் செய்யாதே
மலையேறுஞ்சனங்களை வண்கொடுமைபண்ணாதே
உன்னுடையசுருபமதை ஒருவருக்குங்காட்டாதே
பாலகனாய் சிறுபிள்ளையாய் பதுங்கிநீ நடமாடியிரு
யென்றுசொல்லியெம்பெருமாள் யேகினாரே சங்கபூதம்
மேலநல்லோசிகரத்தில் யேழுயுரிக்கல்லுத்தள்ளி
தெக்குப்புறசிகரமதில் தென்கொப்பு மதுரமரத்தில்
அய்ந்துநல்லோகுழந்தைபோல் அழகில் மிகுத்தவருய்
பிருமணப்பிள்ளைப்போல் பிறப்பட்டு வழிநடந்து
மலைநம்பிகோவில்வந்து மகேந்திரவாடிச்சுத்திப்பார்த்து
காத்தடித்தால்யிலையாடா தக்காக்காச்சிமலையில்சென்று
அம்மலைவனங்களையும் அறிந்துசுத்திப்பார்த்துக்கொண்டு
மணிமுத்தாந்தினுட மலைவளத்தைத்தான்பார்த்து
நாகப்பொதிகை யேகப்பொதிகை அஞ்சுதலைப்பொதிகையும்
ஆனைமொட்டைத்தேறியும் அகத்தீசர் தெரிசனமும்
சுத்திவலமாய்வந்து சுருசுருப்பாய்க்கிழிறங்கி
வாணதீர்த்தம்தானுடி வழிகூடிவடமுகமாய்
நீலகண்டகசமதிலே நின்றுமங்கேபார்க்கையிலே

அய்வருசாக்கள் கோட்டையை அதின்மேற்கே பார்க்கையிலே
மான்கனி பிலாகனி வாளைக்கனி வாடைகண்டு
சங்குநல்லோ பூதத்தாரும் ஒறே தாவாகத்தானே தாண்டி
வாச்சால்போல வாச்சுதென்று வாயாரத்தின்றுகொண்டு
ஓங்கிநல்லோவளர்த்தமரம் ஒருகணுவில்லாதமரம்
அப்பெரியமரங்கண்டு அமர்ந்துவிளையாடும்போது
அய்யர்சொரிமுத்தையர் கோவிலிலே அத்தசாமங்கூடும்போது
சேகண்டிமணிஓசை திடதிடவென்றுகேட்டிடவே
அவ்விருப்பிடத்தைவிட்டேகி யெழுந்திருந்துவிரைவாக
சொரிமுத்தய்யர்தென்பக்கமாய் தோட்டப்பூங்காவில்ச்சென்று
புஷ்பப்பூக்களைத்தான்பரித்துப் பூங்காவில்விளையாடி
அயர்ந்துநித்திரைசெய்துகொண்டு அங்கிருக்கும்வேளையிலே
பூரணபொக்கலைத்தாயறிந்து போற்றிவணங்கிப்புருஷனிடம்
அய்யர்சொரிமுத்தையரிடம் அரிக்கைசெய்யத்துடங்கினளே
அழகில்மிகுந்தவனாய் ஐந்துவயதுப்பாலகனாய்
பிராமணப்பிள்ளைபோலே பேதலித்துப்பூங்காவில்
ஆகாரந்தானும்மற்று அன்னக்களைப்புக்கொண்டு
வாடி மனந்தளர்ந்து மயங்கி நித்திரை போகுதய்யா
அக்குழந்தை யெங்களுக்கு அறிக்கைசெய்யவேண்டுஞ்சுவாமி
போம்பிள்ளாய் பூரணப்பொற்கலை பொல்லாத வம்பனவன்
சமுத்திர அமிர்தங்கடையயிலே சங்குடனே பிறந்த பூதம்
கைலாசம் ஈசானியம் காவல்காத்துவருமன்னாளில்
தேவரிஷி யீஸ்வரர்கள் தெக்ஷணம் வரும் வேளையிலே
துஷ்டநல்லோ தடிகொண்டு துறத்தியங்கே விரட்டுரதும்
கைச்சங்கு தானெடுத்து தானேயங்கேஊதுரதும்
தவஞ்செய்யும் தபோதனரை தட்டளியச்செய்கிறதும்
ருட்சதரைக்கண்டாக்கால் நடுக்கடலில் தாக்கிறதும்
யெம்பெருமாள் யீஸ்வரரும் யெவ்விடம்சென்றாலும்
அவ்விடம் கூடச்சென்று அட்டாதுட்டஞ்செய்கிறதும்
கேதாரம் வைகுண்டம் கேத்திரபாலர் சட்டனாதர்
இவ்விதமாயிருபேரும் இப்படி அங்கே செய்கிறதை
அரியயனும் தானறிந்து அனுப்பிவைத்தார் பூலோகம்
சட்டனாதர் கேத்திரபாலர் சங்குபூதத்தாருமே
கைகூப்பி கைதொழுது கவலையாய் நிற்கையிலே
வாட்டமென்ன கோட்டமென்ன மனச்சலிப்பேனுங்களுக்கு
யெக்காலமுமுங்களுக்கு இருப்பிடங்களிவ்விடமே
அட்டாதுட்டி யக்கிரமங்கள் அகிரத்தியஞ்செய்வதினால்
பூலோகம் சென்றாக்கால் புத்திமிக நேருகுமென்று
அனுப்பிவைத்தார் அரி அயனர் அதினாலிங்கே வந்தவன்காண்
பூங்காவில் மெள்ளச்சென்று பிள்ளைப்போலாதரித்து
கைவிலங்கு கால்விலங்கு மாருப்பு விலங்கு பூட்டி
எனக்கறிக்கை செய்தாக்கால்யெழுந்திருந்து நான்வாரேன்
சோதிநல்லோ வாய்திறந்து சொரிமுத்தையர் சொல்லிடவே

போத்தியடி வணங்கி புறப்பட்டு பூரண பொற்கலை
பூங்காவில்தானே சென்று பிள்ளை தனைக்கையிலெடுத்து
கைவிலங்கு கால்விலங்கு மாருப்பு விலங்கு பூட்டி
அய்யர் சொரிமுத்தய்யருக்கும் அறிக்கைவிட அன்னேரம்
ஆனைவாகன மீதேறி அதைச்சேர்ந்த படையுடனே
பூங்காவில் செல்லயிலே பூதத்தாரும் தானறிந்தார்
கைவிலங்கு கால்விலங்கு மாராப்பு விலங்குகண்டார்
கைச்சலிப்பு மெய்ச்சலிப்பு கனச்சலிப்புக்கொண்டெழுந்து
அரிஅயனார் விடைகொடுத்த அரிகரபுத்திரரவர்தாமென்று
கரங்கூப்பி கைதொழுது சாஷ்டாங்கத்தெண்டனிட
தெண்டனிட்ட பிள்ளை தனை தனக்குத் தென்பக்கமாய்தானிருத்தி
இருப்பிடத்தில் கொண்டுவந்து இருத்தி வைத்துப்புத்திசொல்வார்
அட்டாதுட்டி யகம்பாதம் அக்கிரமங்கள் செய்யாதே
காடேறும் சனங்களை கடுங்கோபஞ்செய்யாதே
மலையேறும் சனங்களை வண்கொடுமை செய்யாதே
கைங்கரியம் செய்வோரை கடுங்கொடுமை செய்யாதே
வேட்டையாட வருவோரை விரட்டி பயங்காட்டாதே
யேழுமலை உன்காவல் யிருப்பிடங்கள் உன்காவல்
பொக்கிஷங்கள் உன்காவல் பூட்டுத்திரவுகோல் உன்காவல்
முன்னோடும் சேவகனாய் முதப்பிள்ளையாய்த்தானிருந்து
அய்யங்காக்ஷிப்பெரும்படையை ஆதரித்துக்கொண்டு வந்தால்
முன் பூசை உந்தனுக்கும் பின் பூசை எந்தனுக்கும்
கைப்பூட்டுத்தான்களத்தி கனத்த சங்கிலி பூதமென்றும்
பேர்கொடுத்து அய்யனாரும் பேப்படைக்கு முதல்பிள்ளையாய்
தென்பக்கத்திருந்திடவே தெண்டனிட்டார் சங்கிலிப்பூதம்
மலைவளங்களைச் சுத்திப்பார்த்து சங்கிலிப்பூதம்
மலைவளங்களைச்சுத்திப்பார்த்து சங்கிலிபூதம் மகிழ்ச்சியுடன் தானிருந்
அப்படியே சிலகாலம் கொலுவிருந்தார் சிலகாலம் [தார்
அப்படியிருக்கிற நாளையிலே அழகுபிள்ளை சங்கிலிபூதம்
சட்டநாதர் கேத்திரபாலர் அய்யங்காட்சி பெரும்படைகள்
காளிகூளி பூதப்பேய்கள் கருப்பன் மேல் வாசப்பனுடன்
தண்டியலை நடத்திக்கொண்டு பிறப்பிட்டார்கள் எல்லோரும்
வானதீர்த்தம் தானுமாடி பாவநாசலிங்கரை சேர்வைசெய்து
அந்தநல்லோ தலத்தைவிட்டு கலியாணிதீர்த்தம்வந்து
அங்குநல்லோ தீர்த்தமாடி சிவசைலம் பாதைகூடி
சிவசைலம் தானும்வந்து அக்காள் தங்கையை சேர்வைசெய்து

அந்தநல்லோ இடத்தைவிட்டு ஆலமலைப்பாதை கூடி
கடையத்துவில்க்கும் விட்டு வந்துசேர்ந்தார் தென்காசி
காசிவிசுவேசரை சேர்வை செய்து உலகம்மாளையுமடிவணங்கி
அந்த நல்லோ தலத்தைவிட்டு புறப்பட்டார்கள் குற்றாலம்
தேனிருந்து தேன் பொழியும் செண்பகா தேவில் வந்து
தானபானம் நேமநிஷ்டைசெய்து மாவடித்துரைவந்து
மாவடித்துரையில் ஸ்நானம் செய்து வழிநோக்கித்திருக்குற்றாலம்
வடவரிவியில் ஸ்நானம் செய்து வந்துசேர்ந்தார் குற்றாலிங்கரிடம்
வந்து நல்லோதான் பணிந்து வணக்கமாயிருப்பதைத்தான் பார்த்து
வாரும்பிள்ளாய் சங்கிலிபூதம் வார்த்தையொன்று சொல்லக்கேளு
யென்னுடைய வடக்குவாசல் யெப்போதும் நீயிருந்து
காத்துக்கொண்டுவந்தாயானால் வருஷத்திலொருகுடையுமிட்டு
முப்பொலியும் முன்பூசையும் கொடுக்கச் செய்கிறேன்
யென்றுசொன்னார் குற்றாலிங்கம் அப்போது சங்கிலிப்பூதம்
சங்கிலிப்பூதம் சட்டநாதர் கேத்தபாலர் அய்யங்காக்ஷிபடையும்
பதினெட்டாம்படியில் கருப்பன்யென்றும் பேறுபெற்று
வடக்குஅய்யனாரைசேர்வைசெய்து அமர்ந்திருந்தார் யெல்லோரும்
அப்படியேகொலுவிருந்தார் குற்றால்கோவில்வடக்குவாசலிலே
கொலுவுகள் தானிருந்து குற்றங்குறை வராமல் காத்திருந்தார்
இப்படியே கொலுவிருந்தார் அந்த யீஸ்வரனார் வாசலிலே
இந்தக்கதை பாடினதோர் உ. கிருஷ்ணபிள்ளைதான் வாழிவாழி
கிருஷ்ணபிள்ளை மருமகன் பொன்னப்பபிள்ளை வாழிவாழி
இந்தக்கதைதன்னை பிரியமாய் அச்சிலிட்ட
சுப்பிரமணியன் கிளையுடன் என்றென்றைக்கும்வாழிவாழி
கலைமகள் அச்சுக்கூடந்தன்னில் அணைவோரும் வாழி வாழி
வாழிவாழியென்றுசொல்லி வரமளித்தார் யீஸ்வரனார்
ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி
மூங்கில்போலன்னசுத்தம் முசியாமல் வாழியவே.

சங்கிலிபூதத்தார் கதை வில்பாட்டு முற்றுப்பெற்றது.

193271
சென்னை-600 006.

கலைமகள் பிரஸ், வடக்கன்குளம்.